# வரலாற்று நோக்கில் பத்துப்பாட்டுப் பதிப்புகள்

**சே.கிருஷ்ணவேணி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
பிஷப் ஹீபர் கல்லூரி
திருச்சிராப்பள்ளி

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** II
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

## முன்னுரை

தமிழ் நூல்கள் தொகுப்பும் முறை மூலம் பராமரிக்கப்படுகிறது. 2500 ஆண்டு பழமையான மக்கள் பயன்பாடும் இலக்கிய படைப்பாக்கமும் நிகழ்ந்த தமிழ்ச் சூழலில் நூல் பயிற்சியானது வாய்மொழி வழியாகவும் எழுத்தாக்க முறையின் மூலமும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அந்தவகையில் தமிழ் மரபில் வெளியான சங்கப் பனுவல்கள் பத்துப்பாட்டு எட்டுத்தொகை என்பதாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இத்தொகுப்பு விவரங்களைத் தொகுத்தவர், தொகுப்பித்தவர் அதற்கு உதவியவர்கள் என்பதாக இக்கட்டுரை அமைகிறது.

## தமிழ் நூல் பதிப்பு வரலாறு

தமிழ்ச் சூழலின் அண்மைக்காலமாகத் தமிழ் நூல்கள் அச்சான வரலாறுகளை எழுதுதல் பற்றிய அக்கறை மிகுந்துள்ளது. அச்சு நூல் உருவாக்கத்தைச் சமூகப் பின்புலத்தோடு இணைத்து நோக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் அவ்வாறு எழுதுகின்ற வரலாறுகள் மட்டுமே முழுமை பெற்றன என்கிற மதிப்பீடுகளும் மேலெழும்பி உள்ளன. பொதுவாக வரலாறுகள் எழுதுவதற்கு ஆவணங்களைப் பயன்படுத்திக்கொள்வது இயல்பான ஒன்றாக இருந்தாலும் ஆவணங்களின் வரலாறுகளைப் பதிவுசெய்தல் பற்றிய ஒற்றுமை தமிழ்ச் சூழலில் அவ்வளவாக இல்லை. இலக்கிய வரலாற்றை எழுதுகிறவர்கள் இலக்கிய இலக்கண உருவாக்கத்தின் காலம் ஆசிரியர் பற்றிய விவரங்களை மட்டும் பதிவு செய்வதும் அந்த இலக்கிய / இலக்கண நூல்கள் அச்சாக்கம் பெற்ற வரலாறுகளைப் பதிவு செய்தல் பற்றி அக்கறை கொள்ளாது இருத்தலும் தமிழ்ச் சுழலில் தொடர்ந்து இருந்து வருகிறது.

## ஓலைச்சுவடியில் பத்துப்பாட்டு

பத்துப்பாட்டில் முதற்பாட்டாகிய திருமுருகாற்றுப்படை சமயப்போற்றுதலும், ஒதுதலும் உடைய நூலாகலின் இதுமட்டும் தனியாக வந்த காலத்தால் முற்பட்ட நூலாகும். இதனைத் தொடர்ந்து பலப்பல பதிப்புகளும் வெளிவந்துள்ளன. திருமுருகாற்றுப்படை 1839ஆம் ஆண்டில் முதற்பதிப்பாகப் பிரதமாகியுள்ளது. இதற்கு முன்னே ஏதேனும் பதிப்பு உண்டா என்பது தெரியவில்லை இது பதவுரையுடன் கூடிய பதிப்பாகும்.

நச்சினார்க்கினியர் உரையைத் தழுவிச் செய்யப்பட்ட பதவுரை என்னும் குறிப்பு நூலில் உள்ளது. இதனை ஆராய்ந்து அச்சிட்டவர் இலக்குமணன். இவர்தம் தந்தையார் அரங்கனார். இதனை இந்நூல் உள்ள கட்டரம்பாக்கம் சுப்பராமையர் சொல்லிய சிறப்புப் பாயிரத்தால் அறியலாம்.

**“எழுதா எழுத்தில் எழுது வித்தனன்**
**அரங்க மகீபன் அளிந்தருள் புதல்வன்**
**இலக்கு மணனென் றியம்பு நாவலன்”**

என்பது இடம் பெற்றுள்ளது.

1853ஆம் ஆண்டில் திருமுருகாற்றுப்படை நூலினை ஆராய்ந்து பதிப்பித்தவர் நல்லூர் ஆறுமுக நாவலர் ஆவர். இவ்வுரையும் நச்சினார்க்கினியர் உரையைத் தழுவி ஆறுமுக நாவலரால் எழுதப்பெற்றது என்பதை அறியமுடிகிறது. பத்துப்பாட்டு 1889 ஆம் ஆண்டில் நச்சினார்க்கினியர் உரை பதிப்பாக முழுமையுடன் முதற்கண் வெளியில்கொண்டு வந்தவர் சாமிநாதையர் ஆவர். பத்துப்பாட்டுகளுள் முருகாற்றுப்படை மட்டுமே அவர் வெளியிடுவதற்கு முன்பே வெளியிடாக வந்துள்ளது. அவர் பத்துப்பாட்டை ஆராய்ந்து வெளியிட்டமையாலேயே அறிஞர் உலகம் பத்துப்பாட்டுகள் எவை என்பதை அறிந்துகொள்ள முடிந்தது. பழந்தமிழர் சுவடிகளைத் தேடி ஐயர் தொகுத்து ஆராய்ந்த தொடக்ககாலத்தில் அவருக்கே பத்துப்பாட்டுகள் எவை என்பதை அறிந்து கொள்ள முடியாமல் இருந்தது.

சிந்தாமணியை ஐயர் பதிப்பித்து வந்தபோது நச்சினார்க்கினியர் காட்டும் மேற்கோள்கள் வந்துள்ள இடங்களைக் கண்டுபிடிப்பதற்காகப் பழஞ்சுவடிகளை ஆராய்ந்தார். ஒருநாள் இரவு ஒரு பழஞ்சுவடியை எடுத்தார். அதில் முதலும் இல்லை இறுதியும் இல்லை. பொருநராற்றுப்படை என்ற பெயர் முதல் ஏட்டில் இருந்தன. பின்னே சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, ஆகியவை தொடர்ந்து இருந்தன. “முருகு பொருநாறு” என்ற தனிப்பாடல் நினைவுக்கு வந்தது. திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை எழுதிய சுவடி அது.

பத்துப்பாட்டுச் சுவடிகளைத் தேடிக்கொண்டு ஐயர் பல ஊர்களுக்குச் சென்றார். திருநெல்வேலியைச் சேர்ந்த வண்ணார பேட்டையில் உள்ள திருப்பாற்கடனாதன் கவிராயர் வீட்டில் பத்துப்பாட்டின் பழஞ்சுவடி ஒன்று கிடைத்தது. இலட்சுமண கவிராயர் உதவியால் முருகாற்றுப்படை முதல் ஏழு பாட்டுள் அடங்கிய சுவடி ஒன்று கிடைத்தது.

**ஐயரின் பத்துப்பாட்டு பதிப்புக்கிடைத்த சுவடிகள்**

| | | |
|---|---|---|
| 1. | திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை (முதலும் முடிவும்) | சுவடி 1 |
| 2. | தருமபுர ஆதீனத்துப் புத்தக சாலை (சில ஒற்றை சுவடிகள் இருந்தது) | சுவடி 1 |
| 3. | வேலூர் குமாரசாமி ஐயர் (ஒரு சுவடி கிடைத்தது) | சுவடி 1 |
| 4. | ஆறுமுகமங்கலம் குமாரசாமி பிள்ளை (மூலம் இல்லை, குறிஞ்சி ஒரு பகுதி இல்லை) | சுவடி 1 |
| 5. | திருநெல்வேலி கவிராச நெல்லையப்ப பிள்ளை (முருகாற்றுப்படை முதல் ஏழு பாட்டு) | சுவடி 1 |
| 6. | வண்ணாரப்பேட்டை திருப்பாற்கடனாத கவிராயர் (ஒரு சுவடி கிடைத்தது) | சுவடி 1 |
| 7. | ஆழ்வார் திருநகரி தேவர்பிரான் கவிராயர் | சுவடி 1 |
| 8. | பொள்ளாச்சி வித்துவான் சிவன் பிள்ளை | சுவடி 1 |
| 9. | திருவம்பலத் திண்ணமுதம் பிள்ளை | சுவடி 1 |
| 10. | ம.வி.கனகசபைப் பிள்ளை | சுவடி 1 |
| 11. | சென்னை அரசாங்கக் கையெழுத்து நூல் நிலையம் | சுவடி 1 |
| 12. | களக்காடு சாமிநாத தேசிகர் மூலம் (மூலம் முழுவதும்) | சுவடி 1 |

ஆகிய பன்னிரெண்டு சுவடிகளாகும்.

பத்துப்பாட்டின் இரண்டாம் பதிப்பு 1918ஆம் ஆண்டு வெளிவந்தது. வழக்கம் போலவே மறுபதிப்பில் திருத்தம்பெற்றிருந்தது. ஏறத்தாழ 300 பக்க அளவு மிகுதியாக இருந்தது. அருஞ்சொற்கள், மேற்கோள்கள், ஒப்புமைப் பகுதிகள் ஆராய்ச்சிக் குறிப்புகள் ஆகியன மிகுதியும் பெருகி இருந்தன.

இதன் மூன்றாம் பதிப்பு 1931ஆம் ஆண்டில் வெளிவந்தது. அதே ஆண்டில் பத்துப்பாட்டு மூலம், வரலாறு, பொருட்சுருக்கம், அரும்பத அகராதி ஆகியவற்றுடன் வெளிவந்துள்ளது.

மூலபாடம் பயிலுதல் தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு வந்த பழக்கம். புலவரின் இலக்கணங்களையும் நிகண்டுகளையும் இலக்கியங்களில் சுவையான பகுதிகளையும் எடுத்துக்கொள்வதுபோல அரிய செய்திகளைத் தெளிவாகக் காட்டியுள்ளார். அறிஞர் கா.நமசிவாய முதலியாரும் பத்துப்பாட்டு மூலப்பதிப்பு 1920-இல் வெளியிட்டார். இதனைப் பதிப்பித்தவர் குமாரசாமி நாயுடு அண்ட் சன்ஸ் என்பவர் ஆவார். ஐயர் பத்துப்பாட்டு மூலத்தை வெளிப்படுத்து முன்னரே திருமுருகாற்றுப்படை மூலப்பதிப்புகள் தமிழகத்தில் வெளியாகி இருந்தன. இவை வெளிவந்த பின்பே முழுப்பதிப்புகளும் வெளிவந்தன.

## முதற் பதிப்புகள்

கலித்தொகையை முதன்முதலில் பதிப்பித்தவர் தமிழ் நூல்களின் பதிப்புத் தந்தை எனப் போற்றவப்படும் இராவ்பகதூர் சி.வை.தாமோதரம் பிள்ளை ஆவார். 1887 ஆம் ஆண்டில் முதற்பதிப்பாகக் கலித்தொகையை வெளியிட்டார். அதற்குப் பின்னர் உ.வே.சாமிநாதையவர் முதற்பதிப்பாகப் பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் 1889ல் வெளிவந்தது.

## பத்துப்பாட்டின் பிறபதிப்புகள்

உ.வே.சாமிநாதையர் உரையுடன் சேர்த்து பத்துப்பாட்டிற்கு முழுமையாக 24 பதிப்புரைகள் வெளிவந்துள்ளன. உ.வே.சாமிநாதையர் முதற்பதிப்பாக 1889ஆம் ஆண்டில் “பத்துப்பாட்டு மூலமும் நச்சர் உரையும்” என்னும் நூலை பதிப்பித்தார். அதனைத் திராவிட ரத்நாகர அச்சக்கூடம் வெளியிட்டது. அதற்குப் பின்பு 1912, 1931ஆம் ஆண்டில் மறுபதிப்புகள் வெளிவந்துள்ளன.

கா. நமச்சிவாய முதலியார் முதற்பதிப்பாக 1920ஆம் ஆண்டில் “பத்துப்பாட்டு மூலம்” என்னும் நூலைப் பதிப்பித்தார். இதனைக் குமாரசாமி நாயுடு சன்ஸ் வெளியிட்டது. பத்துப்பாட்டை ஆங்கிலத்தில் து. V.Chelliah என்பவர் 1946 ஆம் ஆண்டில் “Pathupathu Ten Tamil Idylls” என்னும் நூலைப் பதிப்பித்தார். இதனைப் Saiva Siddahanta works Publishing Society வெளியிட்டது.

ந.சி.கந்தையா பிள்ளை 1935 ஆம் ஆண்டில் “பத்துப்பாட்டு மூலம்” என்னும் நூலைப் பதிப்பித்தார். இதனைச் சைவ சித்தாந்த மகா சமாஜம் வெளியிட்டது. 1940 ஆம் ஆண்டில் சங்க இலக்கியம் முழுவதும் மூலத்தை மட்டுமே வெளியிட்டது.

பொ.வே.சோமசுந்தரனார் 1956ஆம் ஆண்டில் “பத்துப்பாட்டு மூலமும் உரையும்” (இருதொகுதிகள்) என்னும் நூலைப் பதிப்பித்தார். இதனைக் கழகம் வெளியிட்டது. இதன் மறுமதிப்புகள் 1956, 1962, 1966, 1968, 1971 ஆம் ஆண்டுகளில் வெளிவந்தன. மர்ரே எஸ்.ராஜம் 1957ஆம் ஆண்டில் “பத்துப்பாட்டு மூலம்” முதற்பதிப்பாகக் கொண்டு வந்தார். அதற்குப்பின்பு 1981 ஆம் ஆண்டில் (என்.சி.பி.எச்) இரண்டாம் பதிப்பை வெளியிட்டது. வை.மு.கோபாலகிருஷ்ணமாசாரியார் 1961 ஆம் ஆண்டில் “பத்துப்பாட்டு” என்னும் நூலைப் பதிப்பித்தார். பின்பு அவரே நூலைப் வெளியிட்டார். தமிழண்ணல் 1975ஆம் ஆண்டில் “பத்துப்பாட்டு ஆராய்ச்சி உரையுடன்” என்னும் நூலைப் பதிப்பித்தார். இதனை பி.கே.புக்ஸ் வெளியிட்டது. பத்துப்பாட்டின் மூலம் மட்டும் தனிநூலாக வெளியானது.

உ.வே.சாமிநாதயைர் 1986ஆம் ஆண்டில் “பத்துப்பாட்டு முலமும் உரையும் (நிகழ்படபதிப்பு) என்னும் நூலை மறுபதிப்பு செய்து தமிழ் பல்கலைக்கழகம் வெளியிட்டது. அ.மாணிக்கனார் 1999ஆம் ஆண்டில் “பத்துப்பாட்டு முலமும் உரையும்” என்னும் நூலைப் பதிப்பித்தார். இதனை வர்த்தமானன் பதிப்பகம் வெளியிட்டது. ச.வே.சுப்பிரமணியன் 2000ஆம் ஆண்டில் “பத்துப்பாட்டு மூலம்” என்னும் நூலைப் பதிப்பித்தார். இதனை தமிழ்சைவம் வெளியிட்டது.

அ.நாகலிங்கம் 2000ஆம் ஆண்டில் “பத்துப்பாட்டு பாடலும் பொருளும் என்னும் நூலை பதிப்பித்தார். இதனை நீலகண்டன் வெளியிட்டார். எம்.நாராயண வேலுப்பிள்ளை 2000ஆம் ஆண்டில் சங்க இலக்கியம் வழங்கும் பத்துப்பாட்டு (உரைநடை) என்னும் நூலைப் பதிப்பித்தார். இதனை நர்மதா

பதிப்பகம் வெளியிட்டது. ந.சி.கந்தையா 2003 ஆம் ஆண்டில் "பத்துப்பாட்டு திரட்டு" என்னும் நூலைப் பதிப்பித்தார். இதனை அமிழ்தம் பதிப்பகம் வெளியிட்டது.

ச.வே.சுப்பிரமணியன் 2004ஆம் ஆண்டில் "பத்துப்பாட்டு" என்னும் நூலைப் பதிப்பித்தார். இதனை கலாஷேத்ரா பப்ளிகே'ன்ஸ் கோவிலூர் மடாலயம் பதிப்பகம் வெளியிட்டது. குழ.கதிரேசன் 2007ஆம் ஆண்டில் "எளிய தமிழில் பத்துப்பாட்டு" என்னும் நூலைப் பதிப்பித்தார் இதனை ஐந்திணைப் பதிப்பகம் வெளியிட்டது. எஸ்.வையாபுரிப்பிள்ளை 1940ஆம் ஆண்டில் சங்க இலக்கியம் (பாட்டும் தொகையும்) என்னும் நூலைப் பதிப்பித்தார். இதனை சித்தாந்த மகாசமாஜம் பதிப்பகம் வெளியிட்டது. எஸ்.வையாபுரிப்பிள்ளை 1967ஆம் ஆண்டில் சங்க இலக்கியம் (இருதொகுதிகள் மறுபதிப்பு) என்னும் நூலைப் பதிப்பித்தார். இதனை பாரி நிலையம் வெளியிட்டது.

கு.வெ.பாலசுப்பிரமணியன், அ.மா.பரிமணம் ஆரிய இருவரும் 2004 ஆம் ஆண்டில் சங்க இலக்கியம் முழுவதும் (பாட்டும் தொகையும் இரு தொகுதிகள்) என்னும் நூலைப் பதிப்பித்தனர். இதனை என்.சி.பி.எச் வெளியிட்டது. எஸ்.வையாபுரிப்பிள்ளையின் "சங்க இலக்கியம் (பாட்டும் தொகையும் இருதொகுதிகள்) என்னும் நூலைப் 2005 ஆம் ஆண்டில் பதிப்பித்தனர். இதனை முல்லை நிலையம் வெளியிட்டது.

ச.வே.சுப்பிரமணியன் 2006ஆம் ஆண்டில் "சங்க இலக்கியம் மூலம் முழுவதும்" என்னும் நூலைப் பதிப்பித்தார். இதனை மணிவாசகர் பதிப்பகம் வெளியிட்டது 2006 ஆம் ஆண்டில் "சங்க இலக்கியம் பத்துப்பாட்டு உரையுடன்" என்னும் நூலை நியூ செஞ்சரி புக் ஹவுஸ் வெளியிட்டது. அன்புமணி 2007ஆம் ஆண்டில் எட்டுத்தொகைப் பத்துப்பாட்டு நூல்கள் என்னும் நூலைப் பதிப்பித்தார். இதனை மணிமேகலைகப் பிரசுரம் வெளியிட்டது. 2009அம் ஆண்டில் "பத்துப்பாட்டு" என்னும் நூலைக் கதிர்முருகு பதிப்பித்தார். ஆதனைச் சாராதா பதிப்பகம் வெளியிட்டது. பொதுவன் அடிகள் 2009ஆம் ஆண்டில் பத்துப்பாட்டு உரையுடன் நூலை வெளியிட்டார் ப.ஆறுமுகம் 2010ஆம் ஆண்டில் சங்க இலக்கியம் பாட்டும் தொகையும் என்னும் நூலைப் பதிப்பித்தார்.

எம்.இ.பிரபாகரபாபு 2002ஆம் ஆண்டில் பத்துப்பாட்டில் கவிதையாக்கம் என்னும் நூலை வெளியிட்டார். குழ.கதிரேசன் 2006ஆம் ஆண்டில் பத்துப்பாட்டில் கவிதையாக்கம் என்னும் நூலை வெளியிட்டார். முத்தமிழ்முத்தன் 2011ஆம் ஆண்டில் "பத்துப்பாட்டு வித்தப்பா" என்னும் நூலைக் கவிதையில் வெளியிட்டுள்ளார். இவை மட்டுமில்லாமல் பத்துப்பாட்டிற்கு தனித்தனியாகப் பலபதிப்புகள் வெளிவந்துள்ளன.

**தொகுப்புரை**

வரலாற்று நோக்கில் பத்துப்பாட்டுப் பதிப்புகள் என்னும் தலைப்பில் ஓலைச்சுவடி காலம் முதல் இக்காலம் வரை வந்த பதிப்புகள் ஆண்டுவரியாகப் பிரித்து இடம் பெற்றுள்ளன.

ஓலைச் சுவடியில் கிடைத்த பத்துப்பாட்டு ஏடுகளை வைத்துப் பார்த்தால் பல ஏடுகள் இடையில் இல்லாமல் இருந்தன. இதனைப் பல்வேறு ஆசிரியர் தொகுத்துப் பாடல்களை இணைத்துக் காட்டியுள்ளது தெரிகிறது. பத்துப்பாட்டுகளின் பாடல்கள் காலம், எழுதிய ஆசிரியர் பற்றிய குறிப்புகள் வேறுபட்டுள்ளன.

**பார்வை நூல்கள்**

1. இரா.இளங்குமரன், சுவடிக்கலை அரிமாப்பதிப்பகம் வெளியீடு
2. இரா.ஜானகி சங்க இலக்கியப் பதிப்புரைகள், பாரதி புத்தகாலயம்,சென்னை.